RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 71 | மார்ச்.20 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம்! முதல்வர் மு.க. ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, மார்ச்.20-

ஜவுளி ஏற்றுமதியில் குஜராத், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களை பின்னுக்குத் தள்ளி தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளதாக முதல்வர் மு.க. ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், "இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில் தமிழ்நாடு மட்டும் 21.84% பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் கடந்த 4 ஆண்டுகளில் ஜவுளி ஏற்றுமதி 29% உயர்ந்துள்ளது. 202425 ஆம் ஆண்டில் ஏற்றுமதி 7997.17 மில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. இதன் மூலமாக குஜராத், மகாராஷ்டிரம் ஆகிய



மாநிலங்களை பின்னுக்குத் தள்ளி ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது" என்று கூறியுள்ளது.

2020-2021இல் 6,193.39 மில்லியன் டாலராக இருந்த தமிழ்நாட்டின் ஏற்றுமதி அளவு, திராவிட மாடல் அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளினால் அடுத்த நான்காண்டுகளில் 7,997.17 மில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில் தமிழ்நாடு மட்டுமே 21.84%!

இவை அனைத்தையும் சொல்வது நாமல்ல, மத்திய அரசு! சாதனைகளைச் சொல்லி வெல்வோம் ஒன்றாக!" என்று பதிவிட்டுள்ளார்.



## "தவெகவுடன் பேசவில்லை; ஆதவ் அர்ஜுனா யாரென்றே தெரியாது" : நயினார் நாகேந்திரன்

திருநெல்வேலி: மார்ச்.20-

"விஜய் கட்சியிலிருந்து எங்களுடன் யாரும் கூட்டணிக்காகப் பேசவில்லை; நாங்களும் அவர்களிடம் பேசவில்லை. ஆதவ் அர்ஜுனா யாரென்றே தெரியாது" என மாநில பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.



திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் ஓரிரு நாட்களில் தமிழகம் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. அவர் வரும்போது கூட்டணிப் பேச்சுவார்த்தை நடைபெறும். மற்றபடி, தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை குறித்து பின்னர் அறிவிப்போம். தேர்தலுக்கு இன்னும் நாட்கள் உள்ளன. வேட்பு மனு தாக்கல் செய்யவே 10 நாட்கள் அவகாசம் உள்ளது.

அமலாக்கத் துறை உள்ளிட்ட அமைப்புகளை வைத்து யாரையும் மிரட்ட வேண்டிய அவசியம் எங்களுக்குக் கிடையாது. அமலாக்கத் துறை, வருமான வரித் துறை ஆகியவை சுதந்திரமான அமைப்புகள். பிரச்சினையில் சிக்கியவர்கள் மீதுதான் இந்த அமைப்புகள் விசாரணை நடத்தும். புதிதாக வழக்குப் பதிவு செய்தால் அமலாக்க துறையை வைத்து நாங்கள் மிரட்டுவதாகச் சொல்லலாம், ஆனால், கடந்த தேர்தலுக்கு முன்னரே தற்போது விசாரணை நடக்கும் அனைவர் மீதும் அமலாக்கத் துறை வழக்கு பதிவாகியுள்ளது.

விஜய் கட்சி ஆரம்பிப்பதற்கு முன்னால் அவர் மீது அமலாக்கத் துறை, வருமான வரித் துறை வழக்குகள் உள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன்பே திமுகவினர் சிலர் மீது வழக்கு இருக்கும் சூழலில், அதை வைத்து மிரட்டுவதாக இப்போது சொன்னால் சரியானதாக இருக்குமா?

நீங்கள் சொல்லும் யாருடனும் நாங்கள் கூட்டணிப் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்பதை பாஜக மாநிலத் தலைவர் என்கிற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன். விஜய் கட்சியில் இருந்தும் எங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தவில்லை அப்படி இல்லாத பட்சத்தில் 'பிம்பம், கம்பம்' என்பதெல்லாம் தேவையில்லாதது. இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறினார்.

தொடர்ந்து, "80 தொகுதிகள், துணை முதல்வர்" போன்ற ஆஃபர் கொடுப்பதாக ஆதவ் சொல்கிறாரே எனக் கேட்டதற்கு, "ஆதவ் அர்ஜுனா என்பவர் யார் என்றே எனக்குத் தெரியாது என்றார்.

'ஜனநாயகன்' படத்திற்கு நெருக்கடி கொடுப்பது பாஜக தான் என கேள்வி எழுந்து வருகிறதே! என்ற கேள்விக்கு, "மத்திய அரசின் அமைப்புகளை நாங்கள் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. அவை அனைத்தும் சுதந்திரமான அமைப்பு. அதில் சம்பந்தப்பட்டவர்களிடம் மட்டுமே விசாரணை நடத்தப்படும் அதில் சம்பந்தமில்லாதவர்கள் மீது எப்படி விசாரணை நடத்த முடியும்." என்றார்.

பிரதமர் வருகிறார்: மேலும் அவர் பேசுகையில், "தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது பிரதமர் மோடி கன்னியாகுமரி மற்றும் கோயம்புத்தூருக்கு வர உள்ளார் அவர் வரும் தேதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாஜகவின் தேசிய தலைவர் நிதின் நபீன் என அகில இந்திய தலைவர்கள் பலரும் ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண் போன்றோரும் தேர்தல் பிரச்சாரத்துக்காக தமிழகம் வரவுள்ளனர்.

திமுக கூட்டணிக் கட்சிகளின் சீட் குறைக்கப்பட்டுள்ளதாக அனைவரும் சொல்கிறார்கள். திமுக கூட்டணி கட்சிகளுக்கான சீட்டை மக்களும் குறைப்பார்கள்.

பாரதிய ஜனதா கட்சி சாதியைச் சார்ந்தோ; மதத்தைச் சார்ந்தோ உள்ள கட்சி கிடையாது. மதம் சார்ந்த கட்சி என்றால் அது திமுக தான். அதனை மறுப்பு இல்லாமல் பகிரங்கமாக என்னால் சொல்ல முடியும். 'இந்துக்கள் வாக்குகள் எங்களுக்கு வேண்டாம்' என வெளிப்படையாக முதல்வர் சொல்லி உள்ளார். பாஜக அப்படியல்ல இஸ்லாமிய அமைப்புகளாக இருந்தாலும் நேரடியாக அவர்கள் நிகழ்வில் பங்கேற்கிறது. கிறிஸ்தவர்களாக இருந்தாலும் அவர்கள் நிகழ்வில் பங்கேற்கிறது," என்றார்.

தொடர்ந்து அவர், "இந்த நல்ல நாளில் அனைவருக்கும் யுகாதி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்" என்று தெலுங்கில் வாழ்த்து கூறினார்.

## 5 தலைநகரங்கள் முதல் 'அன்பான சர்வாதிகார ஆட்சி' வரை: நாதக வாக்குறுதிகளின் முக்கிய அம்சங்கள்

சென்னை: மார்ச்.20-

அன்பான சர்வாதிகார ஆட்சி முறையாக நாம் தமிழர் கட்சியின் ஆட்சி முறை இருக்கும் என்று அக்கட்சி தெரிவித்துள்ளது. 2026 சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு அக்கட்சியின் செயற்பாட்டு வரைவு அறிக்கையை சீமான் வெளியிட்டுள்ளார். அதில் இடம்பெற்றுள்ள வாக்குறுதிகளின் முக்கிய அம்சங்கள்:




தலைநகரை மாற்றுவோம்; தமிழகத்தை மாற்றுவோம்:

சென்னை மட்டுமே தலைநகரா இருப்பதால் கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு என அனைத்தும் ஒரே இடத்தில் குவிந்து கிடக்கிறது. இவை அனைத்தையும் தேடி மக்கள் சிற்றூர்களில் இருந்து நகரத்தை நோக்கி வருவதால் சென்னை பிதுங்கி வழிகிறது. உயிரைச் சுமந்து செல்கிற அவசர ஊர்தி கூடச் சரியான நேரத்துக்குச் செல்ல முடியாத நிலை உள்ளது. இதே நிலை நீடித்தால் சென்னையின் நிலை மேலும் சிக்கலாம். அதனால், நிர்வாக வசதிக்காக கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, தொழில் வளர்ச்சி உட்பட அனைத்தும் பரவலாகச் சென்றடைய நாம் தமிழர் அரசு தலைநகரை பரவலாக்கும்.

தமிழ்நாட்டுக்கு 5 தலைநகரங்கள்:

தமிழகத்தின் மையத்தில் உள்ள திருச்சி முதன்மை நிர்வாக மையமாகச் செயல்படும். சென்னை தொழில்நுட்ப தலைநகராகச் செயல்படும். கோவை தொழில் மற்றும் வணிகத் தலைநகராகவும், மதுரை மொழி, கலை மற்றும் பண்பாட்டுத் தலைநகராகவும், கன்னியாகுமரி தமிழர் மெய்யியல் தலைநகராகவும் செயல்படும்.

பெண்களுக்குத் தனித்தொகுதி:

உள்ளாட்சி அமைப்பில் பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சட்டமன்ற நாடாளுமன்ற தொகுதிகளில் அப்படி வழங்கப்படவில்லை. பெண்களுக்கு சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் தனித்தொகுதிகள் போராடி பெறப்படும்.

மாநிலத்தில் தன்னாட்சி, ஒன்றியத்தில் கூட்டாட்சி:

இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தில் கூட்டாட்சித் தத்துவம் என்பது பெயரளவே உள்ளது. இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டம் 7வது பட்டியலில் உள்ள சட்டமியற்றுகின்ற முறையில் ஒன்றிய அரசு 97 துறைகளில் சட்டமியற்றும் அதிகாரத்தையும் மாநில அரசு 66 துறைகளில் சட்டமியற்றும் அதிகாரத்தையும் பெற்றிருக்கிறது.

இவை தவிர, ஒன்றிய அரசும் மாநில அசுகளும் சேர்ந்து 47 துறைகளில் சட்டம் இயற்றலாம் என்றிருக்கிறது. ஆக ஒன்றிய அரசிடம் 144 துறைகளில் சட்டம் இயற்றுகிற அதிகாரம் உள்ளது. இது ஒன்றியத்தில் ஒற்றையாட்சி முறையையும், தன்னதிகார குவிப்பையும் உறுதி செய்கிறது.

எனவே, நாம் தமிழர் ஆட்சியில் ஒன்றியத்தில் கூட்டாட்சி, மாநிலத்தில் தன்னாட்சி என்ற முழக்கத்தோடு அனைத்து வகையான துறைகளுக்கும் சட்டமியற்றும் அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு என்கிற வகையில் இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டத்தில் உரிய மாற்றம் கொண்டு வர பாடுபடுவோம்.

தமிழர்களுக்கு முன்னுரிமை:

தற்போது நடைமுறையில் உள்ள கல்வி, சமூகம், பொருளாதாரம் சார்ந்த இடப்பங்கீட்டு முறையைப் அம்பேத்கர் வழியில் நாம் தமிழர் அரசு சீராய்வு செய்யும். நாம் தமிழர் அரசானது தமிழ்நாட்டில் தமிழ்க் குடிகளுக்கு இடப்பங்கீட்டில் முன்னுரிமை வழங்கும். பிற மொழிவழி மாநிலங்களில் தமிழின மக்களுக்கு என்ன முன்னுரிமை வழங்கப்படுகிறதோ அதே முன்னுரிமை பிறமொழி வழி தேசிய இன மக்களுக்கு தமிழ்நாட்டில் வழங்கப்படும்.

தமிழகத்தில் உச்ச நீதிமன்றக் கிளை:

தமிழகத்தில் உச்ச நீதிமன்றக் கிளையைச் சென்னையில் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அன்பான சர்வாதிகார ஆட்சிமுறை:

தன்னலம் சார்ந்த கொடுமையான ஆட்சி முறையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமது ஆட்சிமுறை தன்னலமற்ற அன்பான சர்வாதிகார ஆட்சிமுறையாக இருக்கும்.

மணல் கொள்ளைத் தடுப்பு:

அங்குலம் ஆற்றுமணல் உருவாக நூறு ஆண்டுகள் ஆகும். ஆனால், ஒரு நாளைக்கே முப்படி ஆழத்துக்கு மேலாக ஆற்று மணலை சுரண்டி மணல் கொள்ளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மணற்கொள்ளையால் ஆற்றுப்படுகையில் உள்ள தென்னை, பனை மரங்கள் கூட பட்டுப்போய் நிற்கின்றன. எனவே, நாம் தமிழர் அரசு மணற்கொள்ளையைத் தனிப்படைகளை அமைத்து முழுமையாக தடுக்கும்.

பனை தமிழ் தேசிய மரமாக அறிவிக்கப்படும். இருக்கும் பனை மரங்களைப் பாதுகாப்பது, புதிய பனை மரங்களை வளர்த்தெடுப்பது என்ற திட்டம் உருவாக்கப்படும். ஊர்தோறும் இரக்கும் நீர் நிலைகளைச் சுற்றி பனைமரங்களை நட்டு வளர்க்க நடவடிக்கை எடுப்போம்.

வேளாண் பெருங்குடி மக்களே விலையை உறுதிப்படுத்தலாம்:

குண்டூசி முதல் ஏவுகணை வரை எல்லாவற்றையும் உருவாக்குபவர்களே விலையை முடிவு செய்ய இயலுகிறது. ஆனால், வேளாண் பெருங்குடி மக்கள் மட்டும் விளைவிக்கின்ற பொருட்களுக்கு விலையை முடிவு செய்ய இயலவில்லை. அந்த நிலையை மாற்றி உழவர்களே உணவுப் பொருட்களுக்கான விலையைத் தீர்மானிக்கிற உரிமையை நாம் தமிழர் அரசு அளிக்கும்.

ஆடு, மாடு வளர்த்தல் அரசுப் பணி:

ஆடு மாடுகளை வளர்த்தல் அவமானமில்லை, வருமானம், வெகுமானம் அரசுப் பணி. ஆடு, மாடு வளர்த்தல், அது சார்ந்த பண்ணை வேலைகள், இயற்கை உரங்கள் உருவாக்கும் நடுவம் அனைத்திலும் வேலை பார்ப்பவர்கள் அரசு ஊழியர்களாக அறிவிக்கப்படுவார்கள். அரசு ஊழியர்களுக்கான அனைத்துச் சலுகைகளும் இவர்களுக்கு வழங்கப்படும் என்று நாதக வாக்குறுதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருச்செந்தூர் முருகன் கோயில் மார்ச் மாத உண்டியல் வருவாய் ரூ. 4.36 கோடி

திருச்செந்தூர்: மார்ச்.20-

திருச்செந்தூர் முருகன் கோயில் மார்ச் மாத உண்டியல் வருவாய் ரூ. 4.36 கோடி மற்றும் 1 கிலோ தங்கம் கிடைத்துள்ளது. திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் மார்ச் மாத உண்டியல் எண்ணிக்கை கோயில் நிர்வாக அலுவலக அரங்கில் நடந்தது. திருக்கோயில் தக்கார் அருள்முருகன் தலைமை வகித்து, உண்டியல் எண்ணும் பணியினை பார்வையிட்டார்.

இதன்படி உண்டியல் எண்ணிக்கையில் 4 கோடியே 36 லட்சத்து 87 ஆயிரத்து 797 ரூபாயும், தங்கம் 1,143 கிராம், வெள்ளி 20,474 கிராம், பித்தளை 91,180 கிராம் மற்றும் வெளிநாட்டு கரன்சிகள் 2,071 பக்தர்கள் காணிக்கையாக செலுத்தியிருந்தது தெரிய வந்தது.

## தூத்துக்குடி பிளஸ் 2 மாணவி கொலை வழக்கு; முக்கிய குற்றவாளி கைது

தூத்துக்குடி: மார்ச்.20-

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில், பள்ளி மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு படுகொலை செய்த வழக்கில், முக்கிய குற்றவாளி கைது செய்யப்பட்டான்.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் அருகே வேடநத்தத்தை சேர்ந்த பிளஸ் 2 மாணவி, மார்ச், 10ல் திடீரென மாயமானார். மறுநாள் அங்குள்ள காட்டுப் பகுதியில், ஆடைகள் களைந்த நிலையில், அவர்



கொலை செய்யப்பட்டு சடலமாக கிடந்தார். அவர், பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்பது தெரியவந்தது.

குளத்தூர் போலீசார், வழக்கு பதிந்து விசாரித்தனர். கொலையாளிகளை விரைந்து கைது செய்ய வலியுறுத்தி, மாணவியின் உறவினர்கள், கிராம மக்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த விவகாரத்தில், மாணவி மாயமானதாக புகார் வந்ததும் வழக்கு பதிவு செய்யாத போலீசார் மீது நடவடிக்கை எடுக்க, அரசுக்கு ஐகோர்ட் மதுரைக்கிளை உத்தரவிட்டு இருந்தது. விசாரணை முடிவில், இந்த வழக்கில் முக்கிய குற்றவாளி கைது செய்யப்பட்டான். இவன் ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியை சேர்ந்த தர்ம முனீஸ்வரன் என்பது தெரியவந்துள்ளது.

இது குறித்து நெல்லை சரக டிஐஜி சரவணன் கூறுகையில், ''இந்த வழக்கில் 10 தனிப்படைகள் அமைக்கப்பட்டு விசாரணை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. 3 பேரிடம் விசாரணை நடந்து வருகிறது'' என்றார்.

## போலி செய்தி வெளியீடு: நாளிதழ் பெயரில் மோசடி ஈரோடு சுரேஷ் குறித்துத் தவறான தகவல்கள் பரப்பப்படுவதாகக் காவல்துறையில் புகார்



ஈரோடு மார்ச். 20- ஈரோடு மாவட்டம் தமிழகத்தில் பிரபல நடுநிலை காலை நாளிதழின் பெயரையும், அதன் வடிவமைப்பையும் தவறாகப் பயன்படுத்தி, போலியான செய்திகளை டிஜிதி வடிவில் சமூக வலைதளங்களில் பரப்பி வருபவர்கள் மீது காவல்துறையில் முறைப்படி புகார் அளிக்கப்பட்டுள்ளது.

சமீபகாலமாக, ஈரோடு சுரேஷ் என்பவரைத் தொடர்புபடுத்திச் சில தவறான தகவல்கள் அடங்கிய செய்தித்தாள் பக்கம் போன்ற ஒரு பிம்பம் பரப்பப்பட்டு வருகிறது. இது குறித்து அந்த நாளிதழ் நிர்வாகம் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அதில், குறிப்பிட்ட அந்த நபரை (சுரேஷ்) நீக்கியதாக வெளிவந்துள்ள தகவல் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என்றும், அது சில சமூக விரோதிகளால் போலியாகத் தயார் செய்யப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிர்வாகத்தின் அதிரடி நடவடிக்கை: நிறுவனத்தின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையிலும், பொதுமக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலும் இந்த போலி PDF கோப்புகளை உருவாக்கிப் பரப்புவோர் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனப் புகாரில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

"தொழில்நுட்பத்தைத் தவறாகப் பயன்படுத்தி, முறையற்ற தகவல்களைப் பரப்புவது தண்டனைக்குரிய குற்றம். இது போன்ற போலிச் செய்திகளை நம்ப வேண்டாம்," எனப் பொதுமக்கள் மற்றும் வாசகர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## சிவகங்கை தொகுதியில் வெல்லும் தமிழ்ப் பெண்கள் வெற்றிகரமாக முடித்த தொகுதி பொறுப்பாளர் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன்



சிவகங்கை மார்ச். 20- சிவகங்கை மாவட்டத்தில் மாவட்ட திமுக செயலாளரும் தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சருமான சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மொத்தமுள்ள நான்கு தொகுதிகளுக்கும் ஏ தனித்தனியே மகளிரணி நிர்வாகிளை வைத்து களப்பணியாற்றிட அறிவுறுத்தி இருந்தார்...

அதனடிப்படையில் சிவகங்கை மாவட்ட திமுக மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசனை சிவகங்கை சட்டமன்றத் தொகுதி வெல்லும் தமிழ்ப் பெண்கள் பொறுப்பாளராக நியமனம் செய்யப்பட்டிருந்தார்...

மேலும் இயற்கையாகவே கழகக் குடும்பப் பின்னணி கொண்ட பவானி கணேசன் மிகவும் தீவிர கழகப்பணியாற்றும் சுபாவம் கொண்டவராகவே திகழ்கிறார்...

ஸ்டாலின் மகளிர் படையினர் குழுவினரை முடுக்கி விட்டு தானும் களப்பணியில் ஈடுபட்டு தீவிரமாகப் பணியாற்றினார்...

இவர் ஸ்டாலின் பெண்கள் படையினருடன் இணைந்து சட்டமன்ற மேனாள் உறுப்பினர். இளையான்குடி வடக்கு ஒன்றியக்கழக செயலாளர் சுப.மதியரசன். சிவகங்கை நகரச் செயலாளர் சேர்மன் துரை ஆனந்த் . கல்லல் கிழக்கு ஒன்றிய செயலாளர் கல்லல் நா.நெடுஞ்செழியன். காளையார்கோவில் ஒன்றியக்குழு மேனாள் தலைவர். காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய செயலாளர் வே.ஆரோக்கியசாமி . சிவகங்கை வடக்கு ஒன்றிய செயலாளர் திருமலை முத்துராமலிங்கம். சிவகங்கை தெற்கு டாக்டர் ஜெயராமன். காளையார்கோவில் வடக்கு ஆர்.எம்.கென்னடி . காளையார்கோவில் தெற்கு யோக.கிருஷ்ணகுமார் . மானாமதுரை கிழக்கு துரை.இராஜாமணி. வடக்கு முத்துச்சாமி . நாட்டரசன் கோட்டை பேரூர்க்கழக செயலாளர் ஜெயராமன் ஆகியோரது வழிகாட்டலின் படி தங்களின் பகுதிகளில் இணைந்து களப்பணியாற்றியவர் ...

இதுகுறித்து தொகுதி பொறுப்பாளரும் . மாவட்ட மகளிரணி அமைப்பாளருமான பவானி கணேசன் நம்மிடம் பேசும்போது இந்த அரிய வாய்ப்பினை எனக்கு வழங்கிய கழகத்தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர். தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின். கழக துணைப் பொதுச் செயலாளர் . மாண்புமிகு நாடாளுமன்ற மக்களவைக் குழுத்தலைவர். கவிஞர் கனிமொழி. சிவகங்கை மாவட்ட செயலாளர். தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் . மேனாள் அமைச்சர். தலைமைச் செயற்குழு உறுப்பினர் முகவை மு.தென்னவன். மாநில மகளிரணி செயலாளர் . நாடாளுமன்ற மேனாள் உறுப்பினர் ஹெலன் டேவிட்சன். மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி. மேனாள் அமைச்சர். மாநில மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் . மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார். உள்ளிட்ட ஒன்றிய . நகர . பேரூர்க் கழகச் செயலாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதாகவும்...

மேலும் கழகத் தலைமையின் இந்த முன்னெடுப்பானது திமுக வரலாற்றில் புதிய முயற்சியாகவும் அதேவேளையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறிப்பாக ஒவ்வொரு குடும்பப் பெண்களையும் ஸ்டாலின் மகளிர் படையினர் நேரடியாகவே அவரவர் இல்லங்களுக்குச் சென்று தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அ ஆட்சியின் சாதனைகளை எடுத்துக் கூறும் போதே ... அந்த திட்டங்களை பல்வேறு இடங்களில் பெண்களே முன்வந்து பட்டியலிட ஆரம்பித்தனர்...

கழகத் தலைவர். தளபதியார் அவர்கள் கூறுவதைப் போல தமிழ்நாட்டு பெண்கள் அனைவருமே மாநில அரசு வளர்ச்சியின் பங்குதாரர்கள் எனக் குறிப்பிட்டது பெண்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது எனவும் தெரிவித்தார்...

குறிப்பாக மகளிர் விடியல் பேருந்து பயணம். கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் அவரவர் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படுகிறது... தேர்தல் மற்றும் கோடை காலத்தை கணக்கில் கொண்டு முந்தைய தேதிகளில் வங்கிகளில் ரூபாய் ஐந்தாயிரம் வரவு வைத்து ஒவ்வொரு பெண்களுக்குமே ஒரு இன்ப அதிர்ச்சியை வழங்கிய நமது கழகத்தலைவருக்கு பெண்கள் இன்றளவும் தங்களது நன்றிகளைத் தெரிவிப்பது கண்கூடத் தெரிகிறது எனவும் பேசினார்...

தனக்கு ஒதுக்கப்பட்ட சிவகங்கை சட்டமன்றத் தொகுதி 393 பூத்களிலும் மிகுந்த உற்சாகத்துடன் களப்பணியாற்றிய ஸ்டாலின் மகளிர் படையினர் உள்ளிட்ட ஒன்றிய துணைச் செயலாளர்கள் . மாவட்ட . . ஒன்றிய. . நகர. பேரூர்க்கழக . கிளைக் கழக நிர்வாகிகள். இளைஞரணி . மகளிரணி . மகளிர் தொண்டரணி உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளுக்கும் . ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் தனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக தெரிவித்தார்...

கழகத்தலைமை மற்றும் மாவட்டக்கழகம் தங்களுக்கு ஸ்டாலின் மகளிர் படை பேட்ஜ் . டோர் ஸ்டிக்கர்ஸ் . டைரி மற்றும் கழக இரு வண்ணங்களில் புடவைகள் கொடுத்து களப்பணியாற்றியதையெண்ணி மிகவும் பெருமை கொள்வதாக தெரிவித்தார்...

மேலும் முன்னாள் முதல்வர் கலைஞர் பொற்கால ஆட்சியின் வடிவமாக ஒட்டுமொத்த மனித குலத்தின் நல்லாட்சியாக ஆட்சிபுரியும் நமது திராவிட மாடல் ஆட்சிதான் நாயகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சி மலர வேண்டும் எனவும் பெருமைபடத் தெரிவித்தார்..

## தொண்டி அருகே கடலில் மிதந்த மர்மப் பொருள் திருப்பாலைக்குடி அருகே மீட்பு மீனவர்கள் நிம்மதி





திருவாடானை.மார்ச். .20- இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தாலுகா சோழியக்குடி மற்றும் தொண்டிக்கு இடையே, சுமார் இரண்டு நாட்டிக்கல் மைல் தொலைவில் மர்மப் பொருள் ஒன்று மிதந்து கொண்டிருந்தது. இதைப் பார்த்த மீனவர்கள் உடனடியாகக் கடலோரக் காவல் படைக்குத் தகவல் கொடுத்தனர்.

ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே நிலவி வரும் பதற்றமான சூழலில், இது ஏதேனும் 'ஏவுகணையாக' இருக்குமோ என்று மீனவர்கள் முதலில் அச்சமடைந்தனர். ஆனால், முதற்கட்ட ஆய்வில் இது ராக்கெட் ஏவுதளத் திலிருந்து ஏவப்படும் ராக்கெட்டுகளுக்கு எரிபொருளைச் சுமந்து செல்லப் பயன்படும் 'சிலிண்டர்' வடிவிலான ஒரு பகுதி என்பது தெரியவந்தது. கரை ஒதுங்காத நிலையில் அதனை ஜிபிஆர்எஸ் மூலம் கடலோர காவல்துறையினர் தொடர்ந்து கண்காணித்து வந்த நிலையில் இஸ்ரோ (ISRO) நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வருகை தந்தனர். திருப்பாலைக்குடி மற்றும் தேவிபட்டினம் இடையே கடலில் மிதந்து கொண்டிருந்த அந்தப் பொருளைப் பாதுகாப்பாக மீட்டெடுத்த அதிகாரிகள், அதனை மேலாய்விற்காக எடுத்துச் சென்றனர்.

இது ஆந்திரா மாநிலம் ஸ்ரீ ஹரிஹோரட்டா வில் கடந்த ஜனவரி 12ல் இந்தியா ãMòPSLV .C.62 ISi. SITVC.TANK பகுதி வெடித்து சிதறியதில் 600 கிலோ எடை கொண்ட பாகம். கடலில் விழுந்திருக்கலாம் அது தற்போது கரை ஒதுங்கி உள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்

இந்த பொருளை திருவணந்தபுரம். இஸ்ரோ ஆராய்ச்சி மையத்தின் ஆராய்ச்சியாளர்கள். மீட்டு எடுத்துச் சென்று செயலிழக்கு செய்வதாக கூறினர்.

கடந்த சில நாட்களாக இது ஏவுகணையா அல்லது எரிபொருள் கலனா என்ற சந்தேகத்தில் அச்சத்துடன் கடலுக்குச் சென்று வந்த மீனவர்கள், தற்போது அந்தப் பொருள் மீட்கப்பட்டதால் தொண்டி ,திருப்பாலைக்குடி சுற்று வட்டார பகுதி மீனவர்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

## திருவையாறு அருகே உரிய ஆவணங்களின்றி எடுத்து வரப்பட்ட ரூ 55 ஆயிரத்து 700 பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்



தஞ்சாவூர் மார்ச். 20- திருவையாறு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் பறக்கும் படையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில்

திருவையாறு அருகே திட்டை ரோடு ராமாபுரம் பகுதியில் தேர்தல் பறக்கும் படை அலுவலர்தலைமையிடத்து துணை தாசில்தார் சாந்தி தலைமையில் காவலர்கள் கபிலன், மேனகா ஆகியோர் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவ்வழியாக இரு சக்கர வாகனத்தில் வந்த கரந்தை பகுதி குதிரை கட்டி தெரு சாமிநாதன் மனைவி மைதிலி (49) உரிய ஆவணங்களின்றி எடுத்து வந்த ரூ 55 ஆயிரத்து 700 பணத்தை பறிமுதல் செய்தனர். அதை திருவையாறு வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் கண்ணனிடம் தேர்தல் பறக்கும் படை அலுவலர் சாந்தி மற்றும் போலீசார் ஒப்படைத்தனர்.

## 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு நாம் தமிழர் கட்சியின் தேர்தல் அறிக்கை

### தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டார்

சென்னை, மார்ச்.20-



தமிழகத்தில் நிர்வாகத்தை எளிமைப்படுத்த 5 தலைநகரங்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. திருச்சி, சென்னை, கோவை, மதுரை, கன்னியாகுமரி நகரங்கள் தலைநகரங்களாக இருக்கும். தலைமைச் செயலகம் மற்றும் சட்டமன்றம் திருச்சியில் இயங்கும் என கூறப்பட்டுள்ளது.

மேலும், பெண்களுக்கு தனி இடஒதுக்கீடு, குடியரசுத் தலைவரை நேரடி தேர்தல் மூலம் தேர்வு, சென்னையில் உச்சநீதிமன்ற கிளை, ஒரு ஆண்டில் மதுவிலக்கு, வாக்களிப்பு கட்டாயம் உள்ளிட்ட வாக்குறுதிகள் இடம்பெற்றுள்ளது..



■ எதிர் வரும் சட்டமன்ற பொது தேர்தல் 2026 ஐ முன்னிட்டு நீலகிரி மாவட்டம் , 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதி மஞ்சூர் பஜாரில் வாக்காளர்களுக்கு வாக்களிப்பின் முக்கியத்துவம் குறித்து கையெழுத்திட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 ஐ முன்னிட்டு 109. நீலகிரி மாவட்டம் கூடலூர் சட்டமன்ற தொகுதி கூடலூர் தாலுக்கா, தொரப்பள்ளி பஜார் பகுதியில் வாக்காளர்களுக்கு வாக்களிப்பின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



■ டிஎஸ்பி ராஜா



■ மானாமதுரை காவல் ஆய்வாளர் குமரவேல் பாண்டியன்



■ திருப்புவனம் காவல் ஆய்வாளர் திலீபன்



■ மானாமதுரை சார்பு ஆய்வாளர் குகன்

## மானாமதுரை இளைஞர் மரண வழக்கு: சிபிசிஐடி விசாரணைக்கு 11 போலீசார் ஆஜராகவில்லை



மானாமதுரை மார்ச். 20- சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பகுதியைச் சேர்ந்த ஆகாஷ் டெசிசன் (24) என்பவர், கடந்த சில காலத்திற்கு முன்பு போலீஸ் விசாரணையின் போது உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக சிபிசிஐடி போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த வழக்கின் விசாரணைக்காக, சம்பவத்தின் போது பணியில் இருந்த மற்றும் தொடர்புடைய 11 போலீசாருக்கு மதுரை சிபிசிஐடி அலுவலகத்தில் ஆஜராகுமாறு சம்மன் அனுப்பப்பட்டிருந்தது. சம்மன் அனுப்பப்பட்டவர்களின் பட்டியல்:ராஜா டிஎஸ்பி, மானாமதுரை.

திலீபன் இன்ஸ்பெக்டர், திருப்புவனம்.குமாரவேல் பாண்டியன் இன்ஸ்பெக்டர், மானாமதுரை.குகன் எஸ்ஐ.முத்துராஜா மாவட்ட எஸ்பியின் தனிப்பிரிவு எஸ்ஐ.தெய்வேந்திரன் ஏட்டு.முனீஸ்குமார் ஏட்டு.இருளப்பன் போலீசார்.காளீஸ்வரன் போலீசார்.மகேந்திரன் போலீசார்.முத்துப்பாண்டி போலீசார்.நேற்று முதல் இவர்கள் அனைவரும் விசாரணையில் கலந்து கொள்ள வேண்டும் என்று சம்மனில் குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், சம்மன் அனுப்பப்பட்ட 11 போலீசாரும் நேற்று சிபிசிஐடி அலுவலகத்தில் ஆஜராகவில்லை. இவர்கள் அனைவரும் வரும் நாட்களில் விசாரணையில் ஆஜராவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சாதாரண பொதுமக்களுக்கு ஒரு சட்டம், அதிகாரிகளுக்கு ஒரு சட்டமா என்ற கேள்வியுடன் இந்த விவகாரம் சமூக வலைதளங்களில் விவாதமாகி வருகிறது.



# தேர்தல் ஆலோசனை கூட்டம். திமுக வெற்றி வேட்பாளர் சி.வெ.கணேசன் பங்கேற்பு




பெரம்பலூர், மார்ச்..20-

பெரம்பலூர் அருகே திட்டக்குடி சட்டமன்ற நகர பகுதியில் உள்ள 24 வார்டு செயலாளர்களுடன் சட்ட மன்ற தேர்தல் பணி குறித்து ஆலோசனை கூட்டம் திட்டக்குடி சட்டமன்ற திமுக வெற்றி வேட்பாளர் சி.வெ.கணேசன் தலைமையில் நடந்தது. திட்டக்குடி பெண்ணாடம் நகர செயலாளர்கள் வி.பி. பரமகுரு, குமரவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் தேர்தல் பணி, தேர்தல் திமுக வேட்பாளர் வெற்றி குறித்து ஆலோசனை செய்யப்பட்டது. கூட்டத்தில் திமுக நகர ஒன்றிய மாவட்ட மாநில நிர்வாகிகள் அனைத்து நிலை பொறுப்பாளர்கள் மற்றும் கூட்டணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026-100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு நடைபயணம்

## மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் தொடங்கி வைத்தார்




தேனி மாரச். 20-

தேனி மாவட்டம், தேனி பங்களாமேடு பகுதியில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு நடைபயணப் பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங். தொடங்கி வைத்தார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் வருகின்ற 23.04.2026 அன்று நடைபெற உள்ளது. தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199.பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும் மற்றும் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒரு நாட்டின் ஜனநாயகத்தின் வலிமை ஒவ்வொரு குடிமகனின் வாக்குரிமையில்தான் உள்ளது. அதனடிப்படையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் இன்று 199.பெரியகுளம் சட்டமன்றத்தொகுதிக் குட்பட்ட தேனிபங்களாமேடு பகுதியில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் கல்லூரி மாணவர்களின் விழிப்புணர்வு நடைபயண பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் 500க்கும் மேற்பட்ட மகளிர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு வாக்களிப்பதன் அவசியம் குறித்து கோசங்களை எழுப்பியவாறும், பதாகைகளை ஏந்தியவாறும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இப்பேரணி பங்களாமேடு பகுதியில் தொடங்கி பழைய பேருந்து நிலையம் நேரு நிலை வழியாக வாரச்சந்தை வரை சென்று நிறைவுபெற்றது.

அதனைத் தொடர்ந்து, வாக்களிப்பதன் அவசியம் குறித்த தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத் தினார்.

இப்பேரணியில் மாவட்ட வருவாய் அலுவலர் .பராஜகுமார், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்). சந்திரா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் .ஏ.எடிசன், வட்டாட்சியர் .சதீஸ்குமார் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு பெண்கள். கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நீலகிரி மாவட்டம் கூடலூர் தோட்ட தொழிலாளர் தொழிற்ப யிற்சி மையத்தில் மாணவர்களுக்கு இலவச மருத்துவ முகாம்




நீலகிரி, மார்ச்.20-

நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகே கூடலூர் தோட்ட தொழிலாளர் தொழிற்பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், செஞ் சிலுவை சங்க மருத்துவ குழு ஆகியன சார்பில் நடைபெற்ற மருத்துவ முகாமிற்கு கூடலூர் நுகர்வோர் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். தோட்ட தொழிலாளர் தொழிற்பயிற்சி மைய முதல்வர் ஷாஜி ஜோர்ஜ், இளம் செஞ்சிலுவை சங்க ஒருங்கிணைப்பாளர் செல்வகுமார், செஞ் சிலுவை சங்க நிர்வாகி லாய்சன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செஞ்சிலுவை சங்க மாவட்ட செயலாளர் மோரிஸ் சாந்தகுருஷ் முகாமை துவக்கி வைத்தார். முகாமில் செஞ் சிலுவை சங்க மருத்துவ குழு மருத்துவர் ஸ்ரீநாத் தலைமையில் மருந்தளுநர் நவீன், செவிலியர் சுமதி உள்ளிட்டோர் அடங்கிய மருத்துவ குழுவினர் பயிற்சி மையத்தில் உள்ள 100கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இரத்த அழுத்தம், இரத்த சர்க்கரை அளவு மற்றும் பொது மருத்துவ பரிசோதனை மேற்கொண்டனர். தேவையுள்ளவர்களுக்கு மருந்துகள் வழங்கப்பட்டது.

# காரைக்குடி அருகே அதிகாலையிலேயே ஜிபே மூலம் கள்ளச்சந்தை மது விற்பனை நாம் தமிழர் கட்சியினர் 80 மது பாட்டில்களைப் பறிமுதல் செய்து போலீசில் ஒப்படைப்பு






காரைக்குடி மார்ச். 20-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உள்ள பாதரக்குடி பகுதியில், அரசு அனுமதியின்றி சட்டவிரோதமாக அதிகாலையிலேயே மது விற்பனை நடைபெறுவதைத் தடுத்து நிறுத்திய நாம் தமிழர் கட்சியினர், 80 மது பாட்டில்களைப் பறிமுதல் செய்து காவல்துறை யிடம் ஒப்படைத்தனர்.சம்பவத்தின் பின்னணி:பாதரக்குடி பகுதியில் செயல்பட்டு வரும் மதுபானக் கடை (எண்: 7744) மற்றும் அதன் அருகிலுள்ள மது அருந்தும் கூடத்தைச் சார்ந்து, இரவு நேரங்களிலும் அதிகாலை 5 மணி முதலே சட்டவிரோத மது விற்பனை அமோகமாக நடைபெற்று வந்ததாகக் கூறப்படுகிறது. டாஸ்மாக் கடைகள் திறப்பதற்கு முன்பே, டிஜிட்டல் பரிவர்த்தனை (GPay) மூலம் கூடுதல் விலைக்கு மது விற்பனை செய்யப்படுவதாகப் பொதுமக்கள் குற்றம் சாட்டி வந்தனர். காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை எனப் புகார்:

இது குறித்து குன்றக்குடி காவல் நிலையத்தில் பலமுறை புகார் அளித்தும் முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனப் பகுதி மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இதனால் சமூக விரோதச் செயல்கள் அதிகரிப்பதாக புகார் எழுந்தது.

நேரடியாகக் களத்தில் இறங்கிய நாம் தமிழர் கட்சியினர்:

இந்நிலையில், நேற்று அதிகாலை பாதரக்குடி மற்றும் தளகாவூர் பகுதியைச் சேர்ந்த நாம் தமிழர் கட்சியினர் இப்பகுதியில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். அப்போது இருசக்கர வாகனங்கள் மற்றும் காட்டுப் பகுதிகளில் மறைந்து நின்று மது விற்றுக் கொண்டிருந்த நபர்களை அவர்கள் விரட்டிச் சென்றனர்.

கட்சியினரைக் கண்டதும் மது விற்பனையில் ஈடுபட்ட நபர்கள் அங்கிருந்து தப்பி ஓடினர். அவர்கள் விட்டுச் சென்ற சுமார் 80 மது பாட்டில்களை நாம் தமிழர் கட்சியினர் மீட்டனர். பின்னர் இது குறித்து குன்றக்குடி காவல்துறையினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, பறிமுதல் செய்யப்பட்ட மது பாட்டில்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

பொதுமக்கள் கோரிக்கை:

காரைக்குடி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அதிகாலை நேரங்களில் மது விற்பனை அதிகரித்துள்ளதால், மது போதையில் குற்றச் செயல்கள் அரங்கேற வாய்ப்புள்ளதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர். சட்டவிரோத மது விற்பனையை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் எனப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மாதவரத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



மாதவரம், மார்ச். 20-

மாதவரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அதிமுக செயலாளரும் முன்னாள் பால்வளத்துறை அமைச்சருமான வி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் வருகின்ற 2026 தமிழக சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி அனைத்து தொகுதிகாளில் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பது உறுதி செய்வதுடன் தற்போது மாதவரம் சட்டமன்ற தொகுதியில் அதிக வாக்குள் பெறுவது, வாக்காளர்களிடம் அதிமுக செய்த சாதானைகளை பரப்புரை செய்தல் போன்ற பல்வேறு தேர்தல் பணிகள் செய்வது குறித்து தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்களிடம் தீவிர ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் கூட்டணி கட்சி நிர்வாகிகள் அதிமுக வேலாயுதம், கார்மேகம், ரமேஷ், சுப்பிரமணி, கண்ணதாசன், தமிழரசன், மாணிக்கம், சற்குணன்,சுகுமாரன், சுந்தர், டேவிட்சன்,செல்வம், பாலா, பாமக நிர்வாகிகள் சிவபிரகாசம், ஞானபிரகாசம், சண்முகம், பாஸ்கர், ராஜேந்திரன்,லட்சுமிநாராயணன், ஆனந்தன், சகாதேவன், தீனா, பாபு, ரூபன், துளசிங்கம், பழனி, முனுசாமி, மோகன் மற்றும் அமமுக நிர்வாகிகள் வேதாசலம்,கோவிந்தசாமி, மார்க்கபந்து, தியாகராஜன், ரவிகுமார்,ரகு,குட்வில்குமார், புரட்சிபாரதம் நிர்வாகிகள் குமார், மதன், பாஜக நிர்வாகிகள் பாஸ்கர், சிவா,ஹேமலதா, வாசுகி, தமாக நிர்வாகிகள் அருண்குமார் உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் அனைத்துநிலை பொறுப்பாளர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# பாடியநல்லூர் ஊராட்சி கரிகாலன் நகரில் சமூக நல்லிணக்க இஃப்தார் நோம்பு திறப்பு நிகழ்ச்சி







மாதவரம், மார்ச். 20-

திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி கரிகாலன் நகர் சோலியா மஸ்ஜித் அருகே உள்ள மாவட்ட அலுவலகத்தில் எஸ்டிபிஐ கட்சி திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் சார்பாக சமூக நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி மாவட்டத் தலைவர் எம்.ஏ. சாதிக் தலைமையில் நடைபெற்றது.மாவட்ட துணைத்தலைவர் அப்துல்காதர் அனைவரையும் வரவேற்றார்.

மாவட்டப் பொருளாளர் முகம்மது ரபியுல்லா, மாவட்டச் செயலாளர்கள் அப்துல்பஷீர், ஹபீப்ரஹ்மதுல்லா, மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் ஜபுருல்லா, முகம்மதுபயாஸ்கான், எஸ்டிடியூ மாவட்டத் தலைவர் உசேன் பாஷா, மாதவரம் தொகுதி தலைவர் ஷேக்முஹம்மது ஹபீப், பொருளாளர் இம்தியாஸ், செங்குன்றம் நகரத் தலைவர் இர்ஷாத், கும்மிடிப்பூண்டி தொகுதி தலைவர் பாஞ்சிபீர், சோழவரம் ஒன்றிய செயலாளர் அனீஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக எஸ்.டி.பி.ஐ மாநில பொதுச் செயலாளரும் மண்டலத் தலைவருமான அபுபக்கர் சித்திக், மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக செயலாளருமான எஸ்.சுதர்சனம், எஸ்.டி.பி.ஐ மண்டலத் தலைவர் முகம்மதுரஷீத், விடுதலைச் சிறுத்தைகள் வடசென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் இளங்கோவன், திருவள்ளூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் வழக்கறிஞர் காங்கை குமார், சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளரும் சோழவரம் ஒன்றிய முன்னாள் துணைப் பெருந்தலைவருமான மீ.வே. கர்ணாகரன், செங்குன்றம் பேரூர் பொறுப்பாளர் சுதாகர், கவுன்சிலர் காசிநாதன், எஸ்.டி.பி.ஐ சென்னை மேற்கு மாவட்டத் தலைவர் செய்யது அகமத், வடசென்னை மேற்கு மாவட்டத் துணைத் தலைவர் மாலதிமர்யூம், மேற்கு மாவட்டச் செயலாளர் முஹம்மதுரியாசுத்தீன், பிபிசி பிரைவேட் லிமிடெட் செய்யது அகம்மது, செங்குன்றம் மஸ்ஜிதே ஆயிஷா செயலாளர் அப்துல்லத்தீப், சன் வேர்ல்ட் எண்டர்பிரைசஸ் நாகூர் ஹனீஃபா உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் 500க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள், பெண்கள், மாற்று மத சகோதரர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.முடிவில்

மாவட்ட பொதுச் செயலாளர் வழக்கறிஞர் இஸ்மாயில் அனைவருக்கும் நன்றி கூறினார்.



# கிராண்ட்லையன் ஊராட்சி ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மயானக் கொள்ளை திருவிழா

மாதவரம், மார்ச். 20-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் கிராண்ட்லையன் ஊராட்சியில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் 4ம் ஆண்டு மயானக் கொள்ளை திருவிழா ஆலய மருலாடி அறிவழகன் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது.நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் பந்தகால் நடுதல், கூழ்வார்த்தல், தாய்வீட்டு சீதனம் எடுத்தல்,திருப்பதியம் அமர்த்துதல், பூங்கரத்துடன் கங்கைத் திரட்டுதல், காப்புகட்டுதல், பதிவிளக்கு வர்ணித்தல், அலகு தரித்தல் மற்றும் சுவாமிகளுக்கு மஹா தீபாராதனை காண்பித்தல், சிவகொள்ளை விடுதல், அம்மன் கரகத்துடன் அக்னி கப்பறை ஊர்வலம் வருதல்,சுவாமிக்கு சிறப்பு பூஜைகள் செய்து தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்திலிருந்து உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாளத்துடன் கிராண்ட்லையன் இடுக்காட்டில் சென்று மயானக் கொள்ளை விடுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து கும்பம்கலைத்தல், உற்சவர் திருவீதி உலா நடைபெற்றது. இத்திருவிழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் மற்றும் கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.

# வேளாண் பொருட்களுக்கு ஊக்கத் தொகை: மத்திய அரசின் உத்தரவுக்கு விவசாயிகள் சங்கம் கண்டனம்

சென்னை, மார்ச்.20-

விவசாயிகள் விளைவிக்கும் வேளாண் பொருட் களுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஆதார விலையை விட, மாநிலஅரசுகள் கூடுதலாக ஊக் கத்தொகை வழங்கக்கூடாது என, மத்திய அரசு பிறப் பித்துள்ள உத்தரவுக்கு, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.எஸ்.மாசிலா மணி வெளியிட்ட அறிக்கை: கேரள மாநில எம்.பி. ஜான் பிரிட்டாஸ் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு, பதிலளித்த மத்திய நிதித்துறை அமைச்சகம், விவசாயிகள் விளைவிக்கும் பொருட் களுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஆதார விலைக்கு மேல் மாநில அரசுகள் எவ்வித கூடு தல் தொகையையும் வழங்கக் கூடாது என்று, அனைத்து மாநில தலைமை செயலர்களுக்கும் ஏற்கனவே கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

மேலும், கேரளா போன்ற மாநிலங்கள் தற்போது வழங்கி வரும் ஊக்கத் தொகையை நிறுத்துவது குறித்து பரிசீலிக்க வேண்டும். நாடு முழுவதும் 22 விளைபொருட் களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் எவ்வித தொகையையும் அரசு ஆதரிக்கவில்லை என்றும் மத் திய அரசு திட்டவட்டமாக கூறியுள்ளது.

வேளாண் விளைபொருட்களுக்கான உற்பத்தி செலவு என்பது நாடு முழுவதும் ஒரே சீராக இருப்பதில்லை.

மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடும் நிலையில், முதலீட் டுக்கான வட்டி, குடும்ப உழைப்பு உள்ளிட்ட அனைத்து செலவுகளையும் கணக்கில் கொள்ளாமல், ஒரு பகுதியை மட்டும் கணக்கிட்டு அறிவிக்கப்படும் விலையால் விவ சாயிகள் பெரும் இழப்பைச் சந்தித்து வருகின்றனர்.

இந்த இழப்பை ஈடுகட்டவே, அந்தந்த மாநில அரசுகள் தங்களின் நிதி நிலைமைக்கு ஏற்ப ஊக்கத் தொகைகளை வழங்குகின்றன. எனவே, விவசாயிகளைப் பாதிக்கும் இந்த உத்தரவை மத்திய அரசு உடனடியாக கைவிட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.



## புள்ளிலையன் ஊராட்சி புதுநகரில் ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் என்று தீவிர பரப்புரை

மாதவரம், மார்ச். 20-

மாதவரம் சட்டமன்ற தொகுதி புழல் ஒன்றியம் புள்ளிலையன் ஊராட்சிக்கு உட்பட்ட புதுநகரில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் , துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் ஆணைக்கிணங்க சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ். சுதர்சனம் வழிகாட்டுதலின்படி ஒன்றிய பொறுப்பாளர் அற்புதராஜ் முன்னிலையில் முன்னாள் புள்ளிலையன் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் கே.மாதவன் தலைமையில் வீடுவீடாக சென்று திமுக ஆட்சியில் மக்களுக்கு செய்த சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வெல்லும் தமிழ் பெண்கள் மூலம் மீண்டும் ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் என்று தீவிர பரப்புரை செய்து வருகின்றனர். இதில் நிர்வாகிகள் அரிபிரபாகரன், பத்மநாபன்,பிரேமலதா, மனோகரன் உள்ளிட்ட திமுகவினர்கள் உடனிருந்தனர்.



## கிருஷ்ணகிரி மாவட்டத்தில்ரம்ஜான் நோன்பு திருநாளை யொட்டி இஸ்லாமியர்களின் பள்ளி வாசல்களில் பூந்தி திருவிழா

கிருஷ்ணகிரி, மார்ச். 20-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரம்ஜான் நோன்பு திருநாளையொட்டி, இஸ்லாமியர்களின் பள்ளி வாசல்களில், ‘லைலத்துல்கதர்’ என்ற பூந்தி திருவிழா மற்றும் சிறப்பு தொழுகை நடந்தது.

நாடு முழுவதும் வருகிற 21ம் ரம்ஜான் திருவிழா கொண்டாடப்பட உள்ள நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவு கிருஷ்ணகிரி லண்டன்பேட்டையில் உள்ள அக்ஸா மசூதி, கோட்டையில் உள்ள ஷாஹி மசூதி, பழையபேட்டையில் உள்ள பூரா மசூதி உள்ளிட்ட பல்வேறு மசூதிகளில், ரம்ஜான் நோன்பு ‘லைலத்துல்கதர்’ என்ற பூந்தி திருவிழா மற்றும் சிறப்பு தொழுகை நடந்தது. இதில் ஏராளமான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டனர். தொழுகைக்கு வந்த அனைவருக்கும் பூந்தி பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

இதே போல், கிருஷ்ணகிரி, ஒசூர், காவேரிப்பட்டணம், பர்கூர், தளி, ஊத்தங்கரை, வேப்பனஹள்ளி, தேன்கனிக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் ரம்ஜான் திருவிழாவையொட்டி, ‘லைலத்துல்கதர்’ என்ற பூந்தி திருவிழா மற்றும் சிறப்பு தொழுகையில் இஸ்லாமியர்கள் ஈடுபட்டனர்.

## தமிழகத்தில் 8.65 லட்சம் முதியோர், மாற்றுத் திறனாளிகள் வீட்டிலிருந்தே வாக்களிக்க படிவம் விநியோகம்

சென்னை, மார்ச்.20-

தமிழகத்தில் உள்ள முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் 8.65 லட்சம் பேர் வீட்டிலிருந்தே வாக்களிப்பதற்கான படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது.



தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிக்க, வாக்குச்சாவடிக்கு வர முடியாத 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் 40 சதவீதத்துக்கு மேல் உடல் பாதிப்புடைய மாற்றுத் திறனாளிகளுக்கு வீட்டிலிருந்தே தபால் வாக்கு மூலம் வாக்களிக்க தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கு, தேர்தல் அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 5 நாட்களுக்குள் தொடர்புடைய தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலருக்கு 12டி படிவம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

தமிழகத்தில் தற்போது, 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் 4 லட்சம் பேர், 100 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் 2,530 பேர், மாற்றுத் திறனாளிகள் 4.63 லட்சம் பேர் என மொத்தம் 8.65 லட்சம் பேர் உள்ளனர்.

இவர்கள் தபால் வாக்கு செலுத்த ஏதுவாக, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் தகுதியுள்ள வாக்காளர்களின் வீடுகளுக்குச் சென்று படிவங்களை வழங்கி, பூர்த்தி செய்த படிவங்களை பெற்று வருகின்றனர்.

வீட்டில் இல்லாதவர்களின் வீடுகளுக்கு மீண்டும் ஒருமுறை செல்ல உள்ளனர்.

2 முறையும் வாக்காளர் வீட்டில் இல்லையெனில், அவர் தபால் வாக்களிக்க விருப்பமற்றவராகக் கருதப்படுவார் என்று தேர்தல் நடத்தும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பின்னர், இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்ட பிறகு, ஒவ்வொருவரின் வீடுகளுக்கு சென்று, வாக்குச்சாவடி அமைப்பை ஏற்படுத்தி, வாக்களிக்க வைப்பதற்கான ஏற்பாடுகளை அந்தந்த தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

## தாம்பரம் அருகே ஐனாசபையின் கோட்பாடு படி நீடித்து நிலையான வளர்ச்சிக்கான பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 100க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்ட மாரத்தன் ஓட்டம் நடைபெற்றது

தாம்பரம் மார்ச். 20-

காஞ்சிபுரம் மாவட்டம் தாம்பரம் அடுத்த சோமங்கலம் அரசினர் மேல் நிலைப்பள்ளி அருகே ஐனாசபையின் கோட்பாடு படி நீடித்து நிலையான வளர்ச்சிக்கான பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது,





விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தில் "நிலையான வளர்ச்சி இலக்குகளான" வறுமை ஒழிப்பு, பெண் கல்வி, பசியின்மை, சம்மான கல்வி, அனைவருக்கும் கல்வி, ஒற்றுமை போன்றவற்றை அடங்கிய 17 கோட்பாடுகளை கொண்டு ,2030 ஆண்டுகுள்ளாக உலக நாடுகள் அனைத்தையும் அடையும் இலக்கிற்காக மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது,

இதில் சாய்ராம் பொறியியல் கல்லூயின் மாணவர்கள் 100க்கும் மேற்பட்டோர் சோம்மங்கலம் அரசு மேல் நிலைப்பள்ளியில் இருந்து முக்கிய சாலை வழியாக சுமார் ஐந்து கிலோமீட்டர் கால்லூரி வளாகம் வரை மாரத்தான் ஓட்டம் நடத்தி பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்,

பின்பு பேட்டியளித்த ஓய்வுப் பெற்ற மாவட்ட ஆட்சியர் பழனியாண்டி

மாணவர்கள் தங்களின் அன்றாட வாழ்க்கையில் 17 கோட்பாடுகளை முதலில் பின்பற்ற கற்றுகொள்ள வேண்டும் ,அடுத்ததாக தங்களின் குடும்பத்தில் நடைமுறைபடுத்த முடியும் ,தங்களின் குடும்பத்தில் நடைமுறைபடுத்த முடியும்,தாங்கள் பயிலும் கல்வி நிறுவனஙகளில் தலைமை பொறுபேற்று சில திட்டஙகளை வகுத்து செயல்படுத்த முடியம் ,அதற்க்கு பிறகு சமூதாயத்தில் அவர்களை பங்கேற்க்கும் பொழுது அந்த தலைமை பொறுப்பினை ஏற்று நல்ல திட்டஙகளை வகுத்து மக்களுக்கு விழிப்புணர்வு உண்டாக்கி இந்த இலக்குகளை அடைவதற்க்கு மாணவர்களுக்கு தூண்டுதலாக இந்த மாரத்தான் ஓட்டம் அமையும் என்று தெரிவித்தார்.

## திருமண மண்டபங்களில்வாக்காளர்களுக்கு பரிசுபொருட்கள் வினியோகிக்க அனுமதிக்க கூடாது

### கலெக்டர் உத்தரவு

கிருஷ்ணகிரி, மார்ச். 20-

திருமண மண்டபங்களில் வாக்காளர்களுக்கு பரிசு பொருட்கள் வினியோகிக்க அனுமதிக்க கூடாது என்று கலெக்டர் கூறினார்.

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், திருமண மண்டபங்கள், தனியார் விடுதி உரிமையாளர்கள், அச்சக உரிமையாளர்கள், அடகு கடை நடத்துபவர்கள், வட்டி தொழில் புரிபவர்களுக்கு தேர்தல் நடத்தை விதிமுறைகள் தொடர்பான ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு கலெக்டரும், மாவட்ட தேர்தல் அலுவலருமான தினேஷ்குமார் தலைமை வகித்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது: வருகிற ஏப்ரல் மாதம் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள திருமண மண்டபம் மற்றும் தனியார் விடுதி உரிமையாளர்கள் மண்டபத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளின் விவரங்களையும், அந்தந்த அழைப்பிதழ் நகல்களுடன் தினமும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அரசியல் கட்சியினர் தங்கள் மண்டபத்தை பயன்படுத்தி வாக்காளர்களுக்கப் பரிசுப் பொருட்களை வினியோகம் செய்ய அனுமதிக்கக் கூடாது.



அரசியல் கட்சிகள் விருந்து அல்லது கூட்டங்கள் நடத்த விரும்பினால், அவர்கள் தேர்தல் அதிகாரியிடம் உரிய அனுமதி பெற்றுள்ளார்களா என்பதை உறுதி செய்த பின்னரே அனுமதிக்க வேண்டும். இதற்கான செலவு வேட்பாளரின் கணக்கில் சேர்க்கப்படும். மண்டபத்தில் நடப்பது உண்மையான குடும்ப அல்லது மதச் சடங்கு தானா என்பதை உறுதிபடுத்த வேண்டும். அரசியல் நோக்கம் இருப்பதாகத் தெரிந்தால் உடனடியாக தேர்தல் பறக்கும் படைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

எந்த ஒரு நிகழ்வுகளுக்கும் அச்சிடப்படும் துண்டுப் பிரசுரங்கள், போஸ்டர்கள் அல்லது எந்தவொரு தேர்தல் விளம்பரத்திலும் அச்சகத்தின் பெயர் மற்றும் முகவரி தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அச்சிடப்பட்ட 3 நாட்களுக்குள் அதன் நகலையும், வெளியிடுபவரின் உறுதிமொழிப் படிவத்தையும் மாவட்ட தேர்தல் அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அச்சகங்களிடமிருந்து வரும் தகவல்களை சரிபார்த்து, மாவட்ட தேர்தல் அலுவலரின் அலுவலக விளம்பரப் பலகையில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்க வேண்டும்.

அடகுக்கடை மற்றும் வட்டித்தொழில் புரிவோர்கள் கடன் கொடுத்தவர்கள் மற்றும் அடகு வைத்தவர்களின் பட்டியல் முறையாகப் பராமரிக்க வேண்டும். தேர்தல் பறக்கும் படை அல்லது தேர்தல் அலுவலர்கள் கேட்கும் போது இப்பதிவேடுகளைச் சமர்ப்பிக்க வேண்டும். முறையாக ஆவணங்கள் மற்றும் அடகுப் பொருட்கள் இன்றி யாருக்கும் கடன் வழங்க கூடாது. அரசியல் கட்சியினர் சார்பாக, உரிய ஆவணங்கள் இன்றிப் பணப்பரிமாற்றம் செய்வது கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட அடகுக்கடை அல்லது வட்டித் தொழில் உரிமம் உடனடியாக ரத்து செய்யப்படும். அனைவரும் தேர்தல் ஆணைய அறிவுரைகளை கடைபிடிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட எஸ்பி தங்கதுரை, மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், கலெக்டரின் நேர்முக உதவியாளர்கள் கிருஷ்ணன் , ஹெலன்ராணி, தேர்தல் பிரிவு தாசில்தார் சம்பத் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



## சேலம் ஆட்சியர் அலுவலகத்தில் 2,602 புதிய செல்போன்கள் இருப்பு வைப்பு

### அதிமுக புகார் குறித்து தலைமைச் செயலாளர் விளக்கம்

சென்னை, மார்ச்.20-

சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் 2,602 செல்போன்கள் வைக்கப்பட்டுள்ளது குறித்து விசாரணை நடத்த அதிமுக வழக்கறிஞரணி செயலாளர் இன்பதுரை, தலைமை தேர்தல் அதிகாரியிடம் புகார் அளித்தார்.

இதுதொடர்பாக சென்னையில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்த நிலையில், சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் 2,604 செல்போன்கள் மாவட்ட திட்ட அலுவலர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

அவற்றை அங்கன்வாடி பணியாளர், ஊரக வேலைத் திட்ட மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட அரசு ஊழியர்களுக்கு கொடுக்க திட்டமிட்டுள்ளதாக தகவல் கிடைத்தது.

அந்த செல்போன்களை திமுகவே வழங்கியிருக்குமோ என்ற அச்சம் எங்களுக்கு உள்ளது இது குறித்து விசாரிக்க வலியுறுத்தி தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் புகார் மனு அளித்திருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட விளக்கம்: தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வருவதற்கு முன்பாகவே மார்ச் 13ம் தேதி அங்கன்வாடி பணியாளர்களுக்கு 2,696 செல்போன்கள் அரசிடமிருந்து வரப்பெற்று, ஆட்சியர் அலுவலக 2ம் தளத்தில் உள்ள அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது.

நடத்தை அமலுக்கு வந்ததால், அந்த அறை பூட்டி வைக்கப்பட்டு, அதன்சாவி மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.எனவே நடத்தை விதிகள் மீறி அங்கன் வாடிபணியாளர்களுக்கு புதிய செல்போன்கள் வழங்கப்பட்டதாக வந்த புகாரில் உண்மை இல்லை. தேர்தல் நடத்தை விதிகளும் மீறப்படவில்லை. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுஉள்ளது

## ஆந்திர மாநில காரில் 12 கிலோ வெள்ளி பொருட்கள் சிக்கின சென்னையில் ரூ.1.52 கோடி பறிமுதல்

சென்னை, மார்ச்.20-

உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.1.52கோடி ரொக்கப் பணத்தை சென்னை மாவட்டத்தில் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் நேற்று பறிமுதல் செய்தனர்.



தமிழக சட்டப் பேரவைத் தேர்தலையொட்டி சென்னையில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகனச் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி சேப்பாக்கம்திருவல்லிக்கேணி சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட சேப்பாக்கத்தில் உள்ள சுவாமி சிவானந்தா சாலையில் நேற்று காலை தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகனச் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த வழியாக வந்த ஆந்திர பதிவெண் கொண்ட கார் ஒன்றை மறித்து சோதனையிட்டனர். அதில் 12 கிலோ எடையுள்ள வெள்ளி குத்துவிளக்கு, தட்டு உள்ளிட்ட பொருட்கள் இருந்தது தெரியவந்தது.

காரில் வந்தவர் சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றுக்காக வெள்ளிப் பொருட்களை கொண்டு சென்றதும், நிகழ்ச்சி முடிந்து வெள்ளிப் பொருட்களுடன் ஆந்திரா திரும்புவதும் தெரியவந்தது. உரிய ஆவணங்கள் இல்லாததால் அவை பறிமுதல் செய்யப்பட்டன.

சென்னை எல்லீஸ் சாலை வாலாஜா சந்திப்பு அருகே நேற்று மாலை துறைமுகம் தொகுதி தேர்தல் பறக்கும் படை அதிகாரி ராஜேந்திரன் தலைமையிலான குழுவினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, இருசக்கர வாகனத்தில் வந்த நபரை பிடித்து சோதனை செய்தபோது கட்டுக்கட்டாக ரூ.35 லட்சம் பணம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

அவர் சென்னை ஏழு கிணறு பர்தயார் தெருவை சேர்ந்த அனில்குமார் சிங் (47) என்பதும், ஜி.பி சாலையில் இருந்து பணத்தை வாங்கிக் கொண்டு சவுக்கார்பேட்டையில் உள்ள ஒருவரிடம் கொடுக்கச் சென்றதாக கூறினார்.

பணம் அசோக் நகரை சேர்ந்த பைனான்சியர் கமல்(55) என்பவருக்கு சொந்தமானது என்றும் தெரியவந்தது. ஆனால், உரிய ஆவணங்கள் இல்லாததால் ரூ.35 லட்சத்தை கைப்பற்றி வருமான வரித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

தம்பதியிடம் ரூ.65,000 பறிமுதல் நெய்வேலியைச் சேர்ந்த கணேசன் என்பவர் தனது மனைவியுடன் நேற்று காரில் சிந்தாதிரிப்பேட்டை காசினோ திரையரங்கம் அருகே வந்துள்ளார்.

தேர்தல் பறக்கும் படையினர் அந்த காரை நிறுத்தி சோதனை செய்தனர். தம்பதியரிடம் இருந்த ரூ.65 ஆயிரத்தை பறிமுதல் செய்தனர். அது வாடகை வீட்டுக்கான முன்பணம் என்று கூறப்பட்டது. ஆனால், உரிய ஆவணம் இல்லாததால் பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் நேற்று ஒரே நாளில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.1.52 கோடி ரொக்கம் பறிமுதல் செய்து, கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161